RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு அக்டோபர் 26 * 2025 * மலர் -1 * இதழ்-146 * VOL-1 * ISSUE-146 விலை ரூ.3 * பக்கம் -4





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் சென்னை, அண்ணா அறிவாலயத்தில், காஞ்சிபுரம் மாநகர கழகம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் காஞ்சிபுரம், கே.டி.எஸ். மணி மாளிகை மேட்டுத் தெருவில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் வெண்கலச் சிலை, கலைஞர் நூற்றாண்டு அரங்கம் மற்றும் காஞ்சிபுரம் மாநகர கழக அலுவலக புதிய கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அண்ணா அறிவாலயத்திலிருந்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, கழக துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், தலைமை நிலைய அலுவலக செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ். முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஒட்டன்சத்திரம் ஒன்றியம், பெரியகோட்டை, ரெட்டியபட்டி ஊராட்சிகளில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அமைச்சர் அர.சக்கரபாணி பொதுமக்களிடம் மனுக்களை வாங்கினார்.

## கரூர் நெரிசலில் பலியான

# 41 பேரின் குடும்பத்தினருடன் அக்.27-ல் விஜய் சந்திப்பு!

### ★ சென்னைக்கு நேரில் அழைத்து ஆறுதல் கூறுகிறார்;
### ★ அரசியலில் அடுத்தக்கட்ட நகர்வுக்கும் திட்டம்!!

சென்னை, அக்.26–

கரூர் நெரிசலில் பலியான 41 பேரின் குடும்பத்தினரை சென்னைக்கு அழைத்து அக்டோபர் 27–ஆம் தேதி விஜய் சந்திக்க இருப்பதாக செய்தி வெளியாகி உள்ளது. அதற்குப் பிறகே அரசியலில் அவர் அடுத்தக்கட்ட நகர்வு குறித்து முடிவெடுக்க உள்ளார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கடந்த மாதம் தேர்தல் பிரசார பயணத்தை தொடங்கினார். ஒவ்வொரு சனிக்கிழமையிலும் பிரசாரம் செய்யும் வகையில் பயணத் திட்டத்தை வகுத்தார்.

அதன்படி திருச்சியில் முதல்நாள் பிரசாரத்தை மேற்கொண்டார். அன்றைய தினமே அவருக்கு பெருங்கூட்டம் கூடியது. அவரது பிரசாரத்திற்காக தயார் செய்யப்பட்ட பேருந்தும் மெதுவாகவே நகர்ந்தது.

இரண்டாவது சனிக்கிழமையாக டெல்டா மாவட்டங்களில் பிரசாரத்தை மேற்கொண்டார். அங்கும் கடும் கூட்டம் கூடியது. அவரால் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் பிரசாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் 3–ஆவது சனிக்கிழமையாக முதலில் நாமக்கல் சென்றார். அங்கு பிரசாரத்தை முடித்துவிட்டு மாலையில் கரூருக்கு சென்றார். அங்கு வேலுச்சாமி புரம் பகுதியில் பிரசார கூட்டத்தில் பேசினார். அது குறுகலான இடம். பெருங்கூட்டம் கூடியது. அதனால் நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கி 41 பேர் பலியானார்கள். மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தமிழக அரசும், மத்திய அரசும் நிவாரண உதவிகளை வழங்கின. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள், எடப்பாடி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என பலரும் நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள்.

ஆனால் விஜய் சென்னைக்கு வந்துவிட்டார். அவரது கட்சி நிர்வாகிகள் தலைமறைவானார்கள். சில நிர்வாகிகள் மீது வழக்கு போடப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

அதனால் விஜய் கட்சியினரின் செயல்பாடு அடியோடுமுடங்கிப்போனது. மற்ற எல்லா கட்சிகளும் அரசியல் களத்தில் தீவிரமாக இருக்கும்போது, விஜய் தரப்பில் இருந்து எந்தவொரு அறிக்கையும் வெளியாகவில்லை.



அவர் கரூருக்குச் சென்று மக்களை சந்தித்து ஆறுதல் கூறவில்லை என்ற குற்றச்சாட்டும்எழுந்தது.ஆனால் அவர் அங்கு சென்றால் மீண்டும் கூட்டம் கூடும் எனக்கருதி போலீஸ் பாதுகாப்பு வேண்டும் எனக் கேட்டு டி.ஜி.பி.யிடம் மனு செய்யப்பட்டது. ஆனால் கரூர் எஸ்.பி.யை அணுகலாம் என டி.ஜி.பி. அலுவலகம் தெரிவித்தது. ஆனால் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையே விஜய், நெரிசலில் இறந்தவர்களின் குடும்பத்து உறுப்பினர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார். அத்துடன்அந்தகுடும்பத்தினரின் வங்கிக் கணக்கிலேயே தலா ரூ.20 லட்சம் பணத்தையும் செலுத்தினார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை சென்னைக்கு நேரில் அழைத்து ஆறுதல் கூற அவர் முடிவு செய்துள்ளார். இதற்காக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தகவலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அக்டோபர் 27–ஆம் தேதி அவர்கள் அனைவரும் சென்னைக்கு அழைக்கப்படுவர் என்று உறுதியாக தெரியவந்துள்ளது.

த.வெ.க.வின் 2–ஆவது ஆண்டு விழா நடந்த நட்சத்திர விடுதியில் அவர்களை தங்க வைத்து அங்கு வைத்து ஆறுதல் கூறி கூடுதலாக நிவாரண உதவியும் வழங்குவார் என கூறப்படுகிறது.

அதாவது மாமல்லபுரம் அருகே உள்ள நட்சத்திர விடுதியில் தான் 2–ஆவது ஆண்டு விழா நடந்தது. அந்த விடுதியில் சுமார் 50 அறைகள் முன்பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகே விஜய் தனது அரசியலில் அடுத்தக்கட்ட பயணத்தை தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டசபை தேர்தல் நடக்க இன்னும் 6 மாதம் தான் உள்ளது. அதற்குள் கட்சியின் உள்கட்டமைப்பை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் பொதுவான தேர்தல் சின்னமும் பெறப்பட வேண்டும்.

இதற்காக 5 சின்னங்களை விஜய் தரப்பினர் தேர்வு செய்து வைத்திருப்பதாகவும் அந்தப் பட்டியலுடன் நவம்பர் 2–ஆம் தேதி டெல்லிக்குச் சென்று தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கரூர் விபத்து நடந்தது செப்டம்பர்27–ஆம் தேதி. சரியாக ஒரு மாதம் கழித்து பாதிக்கப்பட்ட மக்களை விஜய் சந்திக்க உள்ளார். இந்த ஒருமாத காலமும் தமிழக வெற்றிக் கழகம் முழுமையாக முடங்கிக் கிடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் பயங்கர விபத்து:

# மரத்தில் கார் மோதி பல்கலை. மாணவர் உள்பட 4 பேர் சாவு!

### பிறந்தநாளன்று உயிரிழந்த தொழிலாளி; மற்றொரு மாணவர் உயிர் ஊசல்!!

கோவை,அக்.26 –

தஞ்சாவூர் பகுதியை சேர்ந்தவர்கள்ஹரீஷ்(21), பிரகாஷ் (22), திருச்சியை சேர்ந்தவர்சபா(23). இவர்கள் அனைவரும் கோவையை அடுத்த தெலுங்குபாளையம் பகுதியில் உள்ள வாகனங்களைசுத்தம் செய்யும் ஒர்க்ஷாப் ஒன்றில் வேலை செய்து வந்தனர்.

அதேபோல் தஞ்சாவூரை சேர்ந்தவர் பிரபாகரன் (23), அரியலூரை சேர்ந்தவர் அகத்தியன் (21). இவர்கள் 2 பேரும் கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் 3ம் ஆண்டு படித்து வந்தனர். இவர்கள் 5 பேரும் நண்பர்கள் இவர்கள் அடிக்கடி சந்தித்து பேசிக்கொள்வதுடன், 5 பேரும் காரில் ஆலாந்துறை மற்றும் இருட்டுப்பள்ளம் பகுதியில் உள்ள ஓட்டலுக்கு சென்று சாப்பிடுவது வழக்கம்.

இந்த நிலையில் ஹரீசுக்கு நேற்று பிறந்தநாள் ஆகும். எனவே ஹரீஷ் மற்றும் நண்பர்கள் என 5 பேரும் சேர்ந்து பிறந்த நாளை விமரிசையாக கொண்டாடினர். பின்னர் அவர்கள் நேற்று இரவு 10 மணியளவில் காரில் கோவைசிறுவாணி ரோட்டில் உள்ள இருட்டுப்பள்ளம் பகுதியில் இருக்கும் ஓட்டலுக்கு சென்றனர்.



கோவையில் மரத்தில் கார் மோதி பல்கலைக்கழக மாணவர் உள்பட4 பேர் பலியானார்கள். விபத்தில் சிக்கிய காரையும், பலியானவர்களையும் படத்தில் காணலாம்.

காரை ஹரீஷ் ஓட்டினார். மீதமுள்ள 4 பேரும் காரில் இருந்த னர்.. இரவு நேரம் என்பதால் பேரூர்சிறுவாணி சாலையில் வாகனங்கள் குறைவாகவே செல்லும். இதனால் அந்த கார் அதிவேகமாக சென்றதாக கூறப்படுகிறது.

பேரூர் செட்டிபாளையத்தை அடுத்த பெட்ரோல்பங்க்அருகேசென்ற போது கார் திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந் தது. பின்னர் அந்த கார் தாறுமாறாக ஓடி சாலை ஓரத்தில் இருந்த புளியமரத்தில் டமார் என பயங்கர சத்தத்துடன் மோதி யது. இந்த விபத்தில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. இதனால் காருக்குள் இருந்த ஹரீஷ், பிரகாஷ், சபா மற்றும் அகத் தியன் ஆகிய 4 பேரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த மாணவர் பிரபா கரன் உயிருக்கு போராடிக்கொண்டு இருந்தார். இதுகுறித்து தகவல் அறிந்ததும் பேரூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர்அவர்கள்பிரபாகரனை மீட்டு சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் உயிரிழந்த ஹரீஷ் உள்பட 4 பேரின் உடல்கள் மீட் கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. காரை அதிவேகமாக ஓட்டிச் சென்றதே விபத்துக்கு காரணம்என்றுகூறப்படுகிறது. இதுகு றித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



உடுமலைப்பேட்டை அருகே உள்ள திருமூர்த்தி மலை பகுதியில் பெய்த பலத்த மழையால் காற்றாற்று வெள்ளம் வந்து கொண்டிருக்கிறது.



கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில், மாநகராட்சி ஆணையாளர்மா. சிவகுரு பிரபாகரன் ரங்கநாதபுரம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சார்ந்த மாணவியர்கள் நாகலட்சுமி (12ம் வகுப்பு) மற்றும் மோனிஷா (11ம் வகுப்பு) ஆகியோர் 17 வயதிற்கு உட்பட்ட தமிழ்நாடு பெண்கள் கபடி அணியில் தேர்வு செய்யப்பட்டு, நவம்பர் மாதம் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற உள்ள SGFI FEDERATION போட்டியில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்க உள்ளதை தொடர்ந்து, நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் செயற்பொறியாளர் ஹேமலதா, பள்ளி தலைமை ஆசிரியர்அருள் ஆனந்தம் மற்றும் உதவி கபடி பயிற்சியாளர்தங்கபாண்டி ஆகியோர் உள்ளனர்.



கர்நாடககாவிரிநீர்ப்பிடிப்புபகுதிகளில்கனமழைபெய்துவருவதால்மேட்டூர்அணைக்கு 2–வது நாளாக 65,500 கன அடி தண்ணீர் வருகிறது. அணைக்கு வரும் உபரி நீர் 16 கண் மதகுகள் வழியாக வெளியேற்றப்படுகிறது.



ராஜபாளையம் அருகே

# இரு கோஷ்டிகள் மோதல்; 5 பேருக்கு அரிவாள் வெட்டு!

## பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம்!!

**விருதுநகர்,அக்.26–**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சேத்தூர் ஐந்து கடை பஜார் பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதியில் வசிப்பவர்கள் தங்கள் பகுதியில் போதை ஆசாமிகள் பொதுமக்களுக்கு இடையூறு செய்வதாக புகார் தெரிவித்தனர் இந்நிலையில் கடந்த தீபாவளி அன்று தெருவில் பட்டாசு வெடித்த சிறுவர்களை அச்சுறுத்தி துரத்தியதாக கூறப்படுகிறது .

இதுகுறித்து சேத்தூர் காவல் நிலையத்தில் ஒரு தரப்பினர் கொடுத்த புகார் தொடர்பாக ரோலீசார் சிலரை காவல் நிலையத்தில் விசாரணை செய்து அறிவுரை கூறியதோடு சிறிது நேரம் கழித்து விடுவித்து விட்டனர் இதன் பிரச்சனை தொடர்பாக சிலர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்த ஐந்து குடும்பத்தினரின் வீடுகளுக்கு இரவில் சென்று கதவைத் தட்டி அரிவாளால் தாக்கியும் வீடுகளில் உள்ள பொருட்களையும் சேதப்படுத்தினர் இதில் குட்டி (25) தினேஷ் (23) சூர்யா (27), சமுத்திரம் 56 வினோத்குமார் 27 ஆகிய ஐந்து பேரும் படுகாயங்களுடன் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் இதுகுறித்து வழக்கு பதிவு செய்து சேத்தூர் போலீசார் ரஞ்சித் குமார் 25, ஈஸ்வரன் 19, திலகராஜ் 21, ராஜபாண்டி 22, ராமச்சந்திரன் 30, மாயன் 17, ஆகிய 6 பேரை கைது செய்தனர் இதனையடுத்து தொடர்ந்து போதை ஆசாமிகளால் தங்களது பகுதி பாதிக்கப்பட்டு வருவதாகவும் உடனடியாக இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி ஐந்து கடை பஜார் . தென்காசி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் செய்தனர் தகவலறிந்து வந்த டிஎஸ்பி பஸீனா பீவி, இன்ஸ்பெக்டர் ரமேஷ் கண்ணன், உள்பட போலீசார் தக்க நடவடிக்கை எடுப்பதாக கூறியும் யாரும் கலைந்து செல்லாததால் சாலை மறியல் செய்ததாக ஐந்து பெண்கள் உள்பட 21பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஏறாளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் 'சக்தி' அறிமுகம்:

# சிறு தொழில் முனைவோருக்கான சிறிய தொகை சொத்துக்கடன் திட்டம்!

**கோவை,அக்.26**

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் ஒன்றான ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட், தன்தேரஸ் நாளில் 'ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் சக்தி' என்ற புதிய மைக்ரோ சொத்துக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வணிக மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக சிறு தொழில்முனைவோர்,

வர்த்தகர்கள், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் சம்பளம் பெறும் வாடிக்கையாளர்களுக்கு எளிதான நிதி உதவி வழங்குவதே இதன் நோக்கம். குறைந்த ஆவணத் தேவைகள், நெகிழ்வான கால அவகாசங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்களை பிணையாக ஏற்றுக்கொள்வது போன்ற அம்சங்கள் இதன் சிறப்பம்சங்களாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் சொத்தைப் பயன்படுத்தி வணிக வளர்ச்சியையும் தனிப்பட்ட முன்னேற்றத்தையும் அடைய முடியும். இந்த அறிமுகம் குறித்து நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான சாய் கிரிதர் அவர்கள், "ஆக்ஸிஸ் ஃபைனான்ஸ் சக்தி நிதி உள்ளடக்கத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. முறைப்படுத்தப்பட்ட கடனை அணுகுவதில் சவால்களை எதிர்கொள்ளும் சிறு வணிகர்களுக்கு இது ஒரு புதிய வாய்ப்பை உருவாக்கும்," என்றார். மேலும், தொழில்நுட்பம் மற்றும் திறமையான செயல்முறைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிரமமில்லாத அனுபவத்தை வழங்குவதே நிறுவனத்தின் நோக்கம் எனவும் தெரிவித்தார். இதற்கு முன் திஷா வீட்டு வசதி கடன்திட்டம் மூலம் பொருளாதார ரீதியாக பலவீனமானமற்றும் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக, சக்தி திட்டம் 75 லட்சம் ரூபாய் வரை சிறிய தொகை சொத்துக் கடன்களை வழங்குகிறது.

இது வாடிக்கையாளர்களுக்கு வணிக மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான புதிய நிதி வாய்ப்புகளை திறக்கிறது.

ஆக்ஸிஸ் பைனான்ஸ் நிறுவனம் தனது அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் வலுவான அமைப்புகளின் மூலம் பாதுகாப்பான அடமானக் கடன்களில் நம்பகத்தன்மையுடன் செயல்பட்டு வருகிறது.

# ஏலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலை மீண்டும் திருப்பத்தூர் வரை இயக்க வேண்டும்!

## பயணிகள் கோரிக்கை!!



**திருப்பத்தூர் அக்.26**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் நேற்று தென்னக இரயில்வே நிர்வாகம் சார்பில் அம்ரித் பாரத் திட்டம் குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் பொது கழிப்பிடம் வசதியை ஏற்படுத்த வேண்டும், மூத்த குடி மக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பயணிகளின் நலன் கருதி மின் தூக்கி உடனடியாக அமைக்க வேண்டும், இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த போதிய இடம் அமைக்க வேண்டும், ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு என தனியாக முகப்பு அமைக்க வேண்டும், ஏலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலை மீண்டும் திருப்பத்தூர் வரை இயக்க வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், ரயில் பயணிகள் ரயில்வே துறை அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தனர். இந்த கூட்டத்தில் உதவி பொறியாளர்கள் ராமகிருஷ்ண, ராதாகிருஷ்ணன், ஷியமல் குமார் கூஸ்,நீயாவுதீன், ஜோலார்பேட்டை ரயில் நிலைய மேலாளர் பூபதி மற்றும் ரயில்வே துறை அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள், ரயில் பயணிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

குன்னத்தூர் அருகே

# கஞ்சா விற்றவர் கைது!

**அவிநாசி, அக்.26–**

குன்னத்தூர் அருகே கஞ்சா விற்றவரை போலீசார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். அவரிடம் இருந்து 2.250 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. குன்னத்தூர் } ஊத்துக்குளி சாலை தாளப்பதி பேருந்து நிறுத்தம் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து சம்பவயிடத்துக்கு சென்ற போலீசார் அங்கு சந்தேகத்துக்கு இடமாக கைப்பையுடன் நின்று கொண்டிருந்த நபரை பிடித்து, விசாரணை மேற்கொண்டனர். அப்போது, அவர் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், அவர் பல்லடம் அருகே சுக்கம்பாளையத்தில் வசித்து வரும் பீகார் பாட்னாவைச் சேர்ந்த ராமநாத்சாஹானி (44) என்பது தெரிய வந்தது. இதையடுத்து மதுவிலக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து, ராமநாத் சாஹானியை கைது செய்தனர்.

திருவெண்ணெய்நல்லூர் அருகே

# கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகத்தில் தொழிலாளி சாவு!

**திருவெண்ணெய்நல்லூர், அக்.26**

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பெரிய செவலை கிராமத்தை சேர்ந்தவர் அம்பாயிரம்(வயது 60). தொழிலாளியான இவர், செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள பண்ணையில் கடந்த 30 ஆண்டுகளாக தினக்கூலியாக பணிபுரிந்து வந்தார். வழக்கம் போல் நேற்று காலை 8 மணிக்கு பணிக்கு சென்றார்.இந்த நிலையில் மாலை 5.30 மணி அளவில் ஆலை தொழிலாளி ஒருவர், அம்பாயிரத்தின் மகன் தேவராஜை தொடர்புகொண்டு உங்களது தந்தை மயக்கநிலையில் இருப்பதாக கூறியுள்ளார். அதன்பேரில் அவர், அங்கு சென்று பார்த்த போது மாமரத்தடியில் அம்பாயிரம் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி தகவல் அறிந்ததும் திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகிரி, சப்இன்ஸ் பெக்டர் அன்பழகன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்த புகாரின்பேரில்திருவெண்ணெய்நல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து அம்பாயிரம் எப்படி இறந்தார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.







அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் M.N.கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நெடுங்குன்றம் பொறியியல் கல்லூரி காமராசர் கலையரங்கத்தில் நடைபெற்றது. இம்முகாமில் சுற்றுவட்டார பொதுமக்கள், மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். அத்தோடு பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கண்ணிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை பற்றி மருத்துவமனையில் இருந்து வந்திருந்த மருத்துவர்கள் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். நிகழ்ச்சிக்கு முதன்மை செயல் அதிகாரி ஆர். ஜெயகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.கல்லூரி முதல்வர் திரு. ரவிக்குமார் ஆர். முன்னிலை வகித்தார். துணை முதல்வர் மு. திருப்பதி, நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் கதிர்வேல், ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியம் மாதம்பட்டி ஊராட்சியில் பல நாட்களாக மாதம்பட்டி நாலு ரோடு முதல் குப்பனூர் கரடிமடை செல்லும் வழியில் குப்பைகள் தேங்கி கிடக்கின்றன பள்ளிக்கு செல்லும் குழந்தைகளும் மக்கள் அன்றாட வேலைக்குர செல்லும் வழித்தடமாக இது இருப்பதால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே உடனடியாக தீர்வு காணுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோத்தகிரி அருகே

# 4 வீடுகளை தாக்கிய கரடி; பொதுமக்கள் அச்சம்!



**கோத்தகிரி,அக்.26–**

கோத்தகிரி அண்மைக்காலமாக வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்கு சர்வ சாதாரணமாக உலா வருகின்றனர். இந்நிலையில் அதிகாலையில் தாந்த நாடு கிராமத்திற்கு புகுந்த கரடி ஒன்று கோபால், பாஞ்சாலி, மணியம்மா என்பவர்கள் வீடுகளை கதவை உடைக்க முற்பட்டுள்ளது அவர்கள் கூச்சலிடவே கரடி அங்குள்ள ரவி என்பவர் வீட்டு கதவை உள்ளே நுழைந்துள்ளது. பின்பு அங்குள்ள பொருட்களை சூறையாடியுள்ளது.

இதே கிராமத்தில் தொடர்ந்து கரடி உலா வருகின்றன தற்போது கரடி கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் அடிக்கடி வீடுகளைகதவுகளைஉடைத்து பொருட்களை சூறையாடி வருகின்றன இது குறித்து வனத்துறை இடம் பொதுமக்கள் புகார் தெரிவித்தும் எந்தவித பலனில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர் . தொடர்ந்து கரடி கிராமங்களில் கதவுகளை உடைத்து அதை சரி செய்ய முடியாமல் பொதுமக்கள் இருந்து வருகின்றனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண்.35க்குட்பட்ட கவுண்டம்பாளையம், பாரி நகர் பகுதியில் தூய்மைப்பணியாளர்கள் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று, பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் ஏழூர் ஊராட்சி சீத்தப்பட்டி பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக நடைபெற்ற போது பொது மக்கள் பார்வையிட்டனர்.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நாகப்பட்டினம் மாவட்டம்,திருவாய்மூர்கிராமத்தில்,வடகிழக்குபருவமழையால்பாதிக்கப்பட்டவிவசாயநிலங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு.நாகை மாலி, தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் திரு. என். கௌதமன், தாட்கோ தலைவர் திரு. இளையராஜா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு.வ.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை,வேளாண்மை இயக்குநர் திரு.பா.முருகேஷ், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர்.பி.ஆகாஷ், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை அருகே

# ஆலங்குடியில் சக்தி விநாயகர் திருக்கோயில் பாலாலய விழா!

**புதுக்கோட்டை,அக்.26**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் சக்தி விநாயகர் திருக்கோயில் பாலாலய விழா தாலுகா அலுவலகம் முன்பும், பஸ் ஸ்டாண்ட் அருகில் நேற்று நடைபெற்றது. ஆலங்குடியில் 50 ஆண்டு காலத்திற்கு மேல் சிறு கோயிலாக இருந்து வந்த சக்தி விநாயகர் திருக்கோயில் திருப்பணியை யொட்டி பாலாலயம் துவக்க விழா நடைபெற்றது.

விழாவில் சிவாச்சாரியர் சொர்ணபைரவர் மற்றும் பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம் திருச்சி அபிராமி ஸ்டீல் நிறுவன தொழில் அதிபருமான சசிகுமார் மற்றும் நகர செயலாளர் பழனிகுமார் ஆகியோ தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு சிவாச்சாரியார்கள் ஒன்று கூடி பழைய கோவிலில் வைத்திருந்த சக்தி விநாயகரை அருகில் உள்ள ஆஸ்பெட்சீட் கொட்டகையில் எடுத்து வைத்து அர்ச்சனை மற்றும் பாலாலயபிஷேகம் செய்து தீபாராதனை காட்டினார்கள். ஆகம விதிப்படி சகல பூஜைகள் நடைபெற்று பாலாலயம் செய்யப் பட்டது. பாலாலயவின் சக்தி விநாயகர் திருக்கோயில் திருப்பணியில் கலந்து கொண்ட பக்தர்களும் பக்த கோடிகளும், உபயதாரர்களும், மண்டகபடிதார்களும் நன்கொடையாளர்களும் கலந்து கொண்டு சிற. ப்பித்தனர்.

மேலும் விழாவில் சாமி அபிஷேகம் மற்றும் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பொங்கல் அபிஷேகம் வழங்கப்பட்டது.



திருப்பத்தூர் நகரம் 34வது வார்டு பகுதியில் எம்எல்ஏ நல்லதம்பி திடீரென நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது வார்டு பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்களை உடனடியாக தூர்வார வேண்டும் என நகராட்சி அதிகாரிகளுக்கு எம்எல்ஏ உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது நகராட்சி ஆணையர் சாந்தி, நகர்மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேஷ், நகராட்சி பொறியாளர் நக்கீரன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH




# ஜூபிட்டர் டிராவல் எக்ஸிபிஷனில் நடைபெற்ற இந்தியா டிராவல் மார்க்கெட்; பிரமாண்ட விழா!

**திருச்சி,அக்.26–**
ஜூபிட்டர் டிராவல் எக்ஸிபிஷன் ஏற்பாடு செய்த இந்தியா டிராவல் மார்க்கெட் எக்ஸ்பிபிஷன்ஸ் (ITME) திருச்சியில் உள்ள PLA கிருஷ்ணா அரங்கில் பிரமாண்டமாக நடைபெற்றது. பயண ஆலோசகர்கள், தொழில் நிபுணர்கள் மற்றும் வணிக ஆர்வலர்கள் பெருமளவில் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், தமிழகத்துடன் பாண்டிச்சேரி, கேரளா, கர்நாடகா, கோவா ஆகிய மாநிலங்களிலிருந்தும், பூட்டான், துபாய், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்தும் டெஸ்டினேஷன் மேனேஜ்மென்ட் கம்பெனிகள் (DMCs) கலந்துகொண்டு தங்களின் சுற்றுலா வாய்ப்புகளை அறிமுகப்படுத்தினர். இந்தக் கண்காட்சி தொழில் நிபுணர்களுக்கு புதிய வணிக வாய்ப்புகளை ஆராயவும் நெட்வொர்க்கிங் செய்யவும் ஒரு சிறந்த மேடையாக அமைந்தது. "இந்தியா டிராவல் மார்க்கெட், பயணத்துறையில் புதிய ஒத்துழைப்புகளை உருவாக்கும் முக்கிய நிகழ்வாகும். தொழில் வளர்ச்சிக்கும், உறவுகளையும் வலுப்படுத்தும் அரிய வாய்ப்பாக இது அமைந்தது," என ஜூபிட்டர் டிராவல் எக்ஸிபிஷன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### போலி இன்ஸ்டாகிராம் மூலம்

# இளம்பெண்ணின் மார்பிங் ஆபாச படம் அனுப்பிய வாலிபர் கைது!

**கோவை, அக். 26–**
போலி இன்ஸ்டாகிராம் மூலம் இளம்பெண்ணின் மார்பிங் செய்த ஆபாச படம் அனுப்பிய வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

கோவையை சேர்ந்த 24 வயது இளம்பெண் ஒருவர் கவுண்டம்பாளையம் அருகே உள்ள தனியார் கார் ஷோரூமில் பணிபுரிந்து வருகிறார். இந்த நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் 30ம் தேதி இரவு 11:30 மணியளவில், அந்த இளம்பெண் வீட்டில் தனது போனில் இன்ஸ்டாகிராம் பக்கத்தை பார்த்து கொண்டு இருந்தார். அப்போது அடையாளம் தெரியாத இன்ஸ்டாகிராம் கணக்கிலிருந்து அந்த இளம்பெண்ணுக்கு மார்பிங் செய்யப்பட்ட தனது ஆபாச புகைப்படம் வந்துள்ளது. அதை கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த இளம்பெண் இன்ஸ்டாகிராமில் மார்பிங் செய்யப்பட்ட புகைப்படத்தை அனுப்பியவரைத் தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால் அவரால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதைத் தொடர்ந்து, அந்த இளம்பெண் கடந்த 4ம் தேதி கோவை மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார்.புகாரின்பேரில் சைபர் கிரைம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். அதில் அந்த இளம்பெண்ணுடன் அதே ஷோரூமில் பணிபுரிந்து வந்த கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த மணிகண்டன் (24) என்பவர் போலி இன்ஸ்டாகிராம் மூலம் ஆபாச புகைப்படத்தை அனுப்பி இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து சைபர் கிரைம் போலீசார் மணிகண்டனைக் கைது செய்து அவரது செல்போனை ஆய்வு செய்தனர். அப்போது மணிகண்டன் அவருடன் பணிபுரிந்த பல பெண்களின் 500க்கும் மேற்பட்ட மார்பிங் செய்யப்பட்ட ஆபாச படங்களை போனில் வைத்திருந்ததை கண்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து போலீசார் கைது செய்யப்பட்ட மணிகண்டனை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தொழிலாளியை கொலை செய்த வட மாநில வாலிபருக்கு ஆயுள் தண்டனை!

**கோவை, அக்26–**
கோவை மாவட்டம் செட்டிப்பாளையம் போலீஸ் நிலையத்திற்குட்பட்ட ஒத்தக்கால் மண்டபம் பகுதியில்ஜார்க்கண்ட் ,சத்தீஸ்கர் உள்ளிட்ட வட மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள்ஒரே இடத்தில் தங்கியிருந்து பணிக்கு சென்று வருகின்றனர்.

இதில் சத்தீஸ்கர் மாநிலத்தை சேர்ந்த சுதன்தண்டி ( 25) தங்கியிருந்த அறையில் மற்ற தொழிலாளர்களும் இருந்தனர்,இந்த நிலையில்சுதன்தண்டிகடந்த 2024ம் ஆண்டு பிப்ரவி மாதம் அவர் தங்கியிருந்த அறைக்கு அருகே வசித்து வந்த சஞ்சய்குமார்ராம் என்பவரை தனியாக பேச வேண்டும் என்று அழைத்துள்ளார், ஆனால் அவர் வர மறுத்துள்ளார், இதனால் ஆத்திரம் அடைந்த சதன்தண்டிஅவரை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்,

அப்போது சஞ்சய்குமார்ராமிற்று ஆதரவாக அங்கிருந்த ராமேஷ்குமார்(20) என்பவர் பேசியுள்ளார், இதனால் ஆத்திரமடைந்த சுதன்தண்டிராகேஷ்குமாரையும் திட்டியுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது, அதில் ஆத்திரமடைந்த ராகேஷ்குமார் ,சுதன் தண்டியை தாக்கி உள்ளார்.மேலும்அவர் சுதன்தண்டியை பார்க்கும் போதெல்லாம் கேலிசெய்து வந்துள்ளார்.

இதனால் சுதன்தண்டி தன்னை தாக்கி கேலி செய்யும் ராகேஷ்குமாரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார், இதற்காக அவர் கடந்த 2024 ம் ஆண்டு பிப்ரவி மாதம்16 ந் தேதி வேலாந்தாவளம்செல்லும் சாலையில் உள்ள ஒர கடையில்கத்தியை வாங்கி தனது அறையில் பதுக்கி வைத்தார், பின்னர் அன்று இரவு சுமார் 8 மணியளவில் சுதன்தண்டிராகேஷ்குமார் தங்கியிருந்த அறைக்கு சென்று தன்னுடன் மது குடிக்க வரும்படி அவரை அழைத்துள்ளார்.

ராகஷ்குமாரும் அவருடன் சென்று மது குடித்துள்ளார்.அப்போது அறையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ராகேஷ்குமாரை குத்திவிட்டு சுதன்தண்டி அங்கிருந்து தப்பிட சென்றார்,

இதில்சம்பவஇடத்திலேயே ராகேஷ்குமார் உயிரிழந்தார், இந்த சம்பவம் குறித்து செட்டிப்பாளையம் போலீசார் வழக்குப் பதிவு செய்து சுதன்தண்டியை கைது செய்தனர்ல வழக்கு விசாரணை கோவை முதலாவது கூடுதல்அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது, நேற்று வழக்கை விசாரித்த நீதிபதி சசிரேகா தொழிலாளியை கொலை செய்த சுதன்தண்டிக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ. 5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# கோவை மாநகராட்சி மத்திய மண்டலத்தில் 24 மணி நேர குடிநீர் திட்டப்பணி!

## ஆணையாளர் நேரில் ஆய்வு!!

**கோவை, அக்.26–**
கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் தூய்மைப்பணிகள் மற்றும் மத்திய மண்டலத்தில் நடைபெற்று வரும் சூயஸ் குடிநீர்திட்டப்பணிகள்குறித்து மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேற்கு மண்டலம் தடாகம் சாலை, இடையர்பாளையம், கவுண்டம்பாளையம்,பாரதிநகர்மற்றும் நர்மதா வீதி ஆகிய பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.,மேலும் கவுண்டம்பாளையம்,பாரிநகர் பகுதயில் சாலை சீரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார், இதைத் தொடர்ந்து மத்திய மண்டலம் பாரதி பூங்காவளாகத்தில் சூயஸ் நிறுவனத்தின் 24 மணி நேரகுடிநீர் திட்டத்தின் கீழ் சுமார் 55லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதையும், மேட்டுப்பாளையம் சாலை வடகோவைபகுதியில்,சூயஸ்நிறுவனத்தின் 24 மணி நேர குடிநீர் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர்திட்டப்பணிகளையும் மாநகராட்சி ஆணையாளர் ஆய்வு செய்து குடிநீர் திட்டப் பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார், இந்த ஆய்வின்போது மாநகராட்சி அலுவலர்கள்பலர்உடனிருந்தனர்.

### ஆனைமலை அருகே

# புதுவை அமைச்சர் கோவில்களில் சிறப்பு வழிபாடு!

**ஆனைமலை அக். 26–**
கோவை மாவட்டம் ஆனைமலையில் பழமை வாய்ந்த மாசாணியம்மன் கோவில், வேட்டைக்காரன்புதூர் அழுக்கு சித்தர் சுவாமி திருக்கோவில் மற்றும் சேத்துமடை காளியம்மன் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிகளுக்கு தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வருகை தந்து சுவாமியை தரிசனம் செய்து செல்வார்கள் இந்த வகையில் ஆனைமலையை அடுத்த வேட்டைக்காரன்புதூரில் உள்ள அழுக்குசுவாமி சித்தர் திருக்கோ விலில் பாண்டிச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தனது குடும்பத்தி னருடன் சுவாமி தரிசனம் செய்து புதிதாக வாங்கிய சொகுசு காருக்கு சிறப்பு வழிபாடு செய்தார்.

அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பிரசாதம் மற்றும் மாலை மரியாதை வழங்கப்பட்டது.

### அவிநாசி அருகே

# பல ஆண்டுகளாக தீர்வு காணப்படாத சாலை!

## இரு ஊராட்சி மக்கள் அவதி!!



**அவிநாசி,அக்.26–**
அவிநாசி அருகே கருமாபாளையத்தில் மேம்படுத்தப்படாத சாலையால், இரு ஊராட்சி பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அவிநாசி ஒன்றியத்துக்கு உள்பட்ட கருமாபாளையம், வேட்டுவபாளையம் ஆகிய 2 ஊராட்சிகளுக்கு உள்பட்ட முத்தம்மாள் நகர், மேஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில் 300க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

மேலும் இப்பகுதியில், தனியார் பள்ளி, சிறு தொழில் பேட்டை பகுதி ஆகியவை உள்ளது.

இந்நிலையில் இப்பகுதி மக்கள் கருமாபாளையம் } ஆலாக்காட்டு பாளையம் சாலையே பிரதான சாலையாக 30 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் இதற்கிடையில் உள்ள இரு தனியார் நில உரிமையாளர்கள், சாலை உள்ள பகுதி தங்களுடையது எனக் கூறி அளவீடு தீர்வுக்கு வராததால், மண் சாலை மேம்படுத்தப்படவில்லை.

இதேபோல உரிய சாக்கடை வசதியும் அமைக்கப்படவில்லை.

இதனால், நாள்தோறும் பள்ளி வாகனங்கள் உள்பட ஏராளமான வாகனங்கள் வந்து செல்லும் இச்சாலை கரடு முரடாகவும், மழைக் காலங்களில் சேறும், சகதியாகவும் உள்ளது.

இதனால் தனியார், அரசு பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்கள், பணிக்குச் செல்வோர், பொதுமக்கள் உள்ளிட்டோர் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரம் மற்றும் மழைக் காலங்களில் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

பொதுமக்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டும் தீர்வு கிடைக்காததால், உடனடியாக அரசு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, இரு ஊராட்சிகளின் இணைப்புச் சாலை யை உறுதிப்படுத்தி, அடிப்படை வசிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். எனக் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# மழை நீர் புகுந்ததில் 32 வீடுகள் இடிந்து சேதம்!

**திருப்பூர்,அக்.26–**
திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி மலை வாழ் மக்கள் கிராமத்தில் 150 குடும்பங்கள்வசித்து வருகின்றனர் இவர்களுக்கு வனத்துறை சார்பில் தகரக்கூரைகள்வேயப்பட்ட வீடுகள் கட்டி குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 18ஆம் தேதி இரவு பெய்த கனமழையில் மலைவாழ் மக்கள் குடியிருப்புகுக்குள் வெள்ள நீர் புகுந்தது. அதனால் வீட்டு சுவர்களை விரிசல், மண்ணரிப்பு. மேற்கூரைகள் சேதம் என கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்கள் பாது காப்பான இடங்களுக்கு சென்று தங்கினர். இது குறித்த தகவல் அறிந்த உடுமலை வட்டாட்சியர் விவேகானந்தன் மற்றும் வருவாய்த்துறையினர் திருமூர்த்தி மலையில் ஆய்வு மேற்கொண்டனர் இதுகுறித்து பாதிக்கப்பட்டமக்கள்கூறும்போது திருமூர்த்தி மலையில் 100 ஆண்டுகளுக்கு மேலாக மலைவாழ் மக்கள் குடியிருந்து வருகின்றனர். குடியிருக்க பாதுகாப்பான கான்கிரீட் வீடுகள் கிடையாது சாலை தெரு விளக்கு குடிநீர் மருத்துவம் உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை இரும்பு தகர கூரைகள் சுற்றுச்சுவர் மழை மற்றும் இயற்கை பேரிடரின் போது அடிக்கடி சேதம் அடைந்து வருகிறது. இது போன்ற சமயங்களில் அங்குள்ள மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழல் உள்ளது.

எனவே அரசு மலை வாழ் மக்களுக்கு பாதுகாப்பான கான்கிரீட் வீடுகளில் கட்டித் தர வேண்டும். நேற்று முன்தினம் ஏற்பட்ட கனமழை காரணமாக 32 வீடுகள் இடிந்து சேதம் ஏற்பட்டுள்ளது.

இடிந்த வீடுகளில் குடியிருக்க முடியாத சூழல் உள்ளது. எனவே போர்க்கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரன உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.



திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் அமித், துணை மேயர் பாலசுப்பிரமணியன் முன்னிலையில் அவசர மாமன்ற கூட்டம் நடைபெற்றது.

# மருத்துவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்பில் 25 மாணவர்கள்!

## கலெக்டர் பவன்குமார் முன்னிலையில் சேர்ந்தனர்!!

**கோவை,அக்.26–**
கோவை மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது; 2025–26 ம் கல்வி ஆண்டுக்கான மருத்துவம் சார்ந்த ஓராண்டு சான்றிதழ் படிப்புக்கு 260 காலியிடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில்உள்ளதாகஅறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது,

அதைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டரின் வழிகாட்டுதலால் 2024 25 ம் கல்வியாண்டில் 10 ம்வகுப்புபிளஸ்2தேர்ச்சி பெற்று இது வரைஉயர் கல்வி`யில் சேராத மாணவர்கள் மற்றும் 17 வயது பூர்த்தி அடைந்த தகுதி வாய்ந்த மனுதாரர்களுக்கு இ`ச்சான்றிதழ் படிப்பு குறித்து எடுத்துரைக்கப்பட்டு கோவை மருத்துவக்கல்லூரியில் மாவட்டக் கல்லூரியில் மாவட்ட கலெக்டர்முன்னிலையில் 25க்கும் மேற்பட்ட மாணவரகள் நேரடி சேர்க்கை மூலம் அக்டோபர் 24 ந் தேதி சேர்ந்தனர்,

கார்டியோ சோனோகிராபி டெக்னிசியன், திரட்மில் டெக்னிசியன்,அவசரசிகிச்சைடெக்னீசியன். சுவாச சிகிச்சை டெக்னீசியன். மயக்க மருந்து டெக்னீசியன்,தியேட்டர் டெக்னீசியன் பல் நோக்கு மருத்துவமனை பணியாளர் போன்ற சான்றிதழ் படிப்பில் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். அரசுப் பள்ளியில் படித்து இச்சான்றிதழ் படிப்பில் சேரும் மாணவர்களுககு மாதம் ரூ. 2 ஆயிரம் வீதம் ஆண்டுக்கு ரூ. 24 ஆயிரம் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் ஓராண்டு சான்றிதழ் படிப்பில் சேர்ந்துள்ள மாணவர்கள் பட்டயப் படிப்பை முடித்தவுடன் மாதம் ரூ. 30 ஆயிரம் சம்பளத்தில் வேலை வாய்ப்பு எளிதில் கிடைக்கும், ஓராண்டு சான்றிதழ் படிப்பில் இன்னும் 200 மாணவர்கள் சேருவதற்கு வாய்ப்பு இருப்பதால் நவம்பர் 14 ந் தேதிக்குள் மதிப்பெண் சான்றிதழ் மாற்றுச் சான்று, இருப்பிடச் சான்று, ஆதார் அட்டன் போன்றவற்றின் அசல்றும் நகல் ஆவணங்களுடன் மாவட் மருத்துவக் கஙல்லூரி மற்றும் இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரிக்கு நேரில் சென்று விண்ணப்பித்து நேரடி சேர்க்கை பெற்று பயன் பெறலாம், என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அன்னூர் வட்டாரம் பசூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மருத்துவக்கல்லூரியை நேற்று பார்வையிட்டனர், அவர்களுடன் மாவட்ட கலெக்டர் பவன்குமார் கலந்துரையாடினார், இந்த கல்லூரியில் கோவை மருத்துவக்கல்லூரி முதல்வர்கீதாஞ்சலி பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், மாவட்ட திறன் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழக காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில தலைவர் முகம்மது ஆரீப் பிறந்த நாளை முன்னிட்டு கோவையில் ரத்த தான முகாம் நடைபெற்றது.

# ரத்த தான முகாம்!

**கோவை,அக்,26–**
தமிழக காங்கிரஸ் சிறுபான்மை துறையின் மாநில தலைவர் முகம்மது ஆரீப். பிறந்த நாளை முன்னிட்டு கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முன்னதாக கோவையில் இந்திய மருத்துவ சங்க அலுவலகத்தில் உள்ள இரத்த வங்கியில் குருதி கொடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது..

கோவை மாநகர் மாவட்ட சிறுபான்மை துறை சார்பாக நடைபெற்ற இதில், அப்துல்லா அசார் தலைமை தாங்கினார்.

இதில் கோவை மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் விஜயகுமார், வடக்கு மாவட்ட தலைவர் ரங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டு இரத்த தான முகாமை துவக்கி வைத்தனர்.

இதில் காங்கிரஸ் சிறுபான்மை துறையினர் உட்பட நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

தொடர்ந்து மாநகர் மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை மாநில தலைவர் முகம்மது ஆரீஃபிற்கு பலரும் பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்..இந் நிகழ்ச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மை துறை மாநில துணை தலைவர் பஷீர், ஒருங்கிணைப்பாளர் ஹாரீஸ், சிறுபான்மை துறை தெற்கு மாவட்ட தலைவர்ஹாரூன், வடக்கு மாவட்ட தலைவர் தாவூத் அலி, குறிச்சி சர்க்கிள் தலைவர் இஸ்மாயில், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வடமாநில பெண்ணுக்கு ஆம்புலன்சில் பிரசவம்!

**கோவை, அக். 26–**
வடமாநில பெண்ணுக்கு ஆம்புலன்சில் பிரசவ வலி ஏற்பட்டு பெண் குழந்தை பிறந்தது.

அசாம் மாநிலத்தை சேர்ந்தவர் சைனாகுமார். இவரது மனைவி அஞ்சலி குமாரி (28). இவர்கள் கோவை மாவட்டம் அன்னூர்கணேசபுரத்தில்தங்கி வேலை பார்த்து வருகின்றனர். இந்த தம்பதிக்கு ஏற்கனவே 2 குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில் அஞ்சலி குமாரி 3வது முறையாக கர்ப்பமானார்.

நேற்று முன்தினம் அஞ்சலி குமாரிக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனே அஞ்சலி குமாரியை, சைனாகுமார் அன்னூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

அங்கு அவரை டாக்டர்கள் பரிசோதித்தனர். அப்போது அஞ்சலி குமாரி இதுவரை எந்த தடுப்பூசியும் போடவில்லை என்பது தெரிய வந்தது. இருந்தபோதிலும் அவருக்கு பிரசவம் பார்த்தனர். ஆனால் பிரசவம் பார்ப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அஞ்சலி குமாரி அனுப்பி வைக்கப்பட்டார்.அவருடன் அன்னூர் அரசு மருத்துவமனை நர்சு பார்வதி, அவசரகால தொழில்நுட்ப உதவியாளர் தனபால், பைலட் ஆனந்த குமார் ஆகியோர் 108 ஆம்புலன்சில் அவரை கோவைக்கு அழைத்து வந்து கொண்டிருந்தனர்.

கோவை நகரை நெருங்கிய போது, அஞ்சலி குமாரிக்கு மேலும் பிரசவ வலி அதிகமானது.

இதைத் தொடர்ந்து ஆம்புலன்சில் இருந்த நர்சு மற்றும் உதவியாளர்கள் அஞ்சலி குமாரிக்கு பிரசவம் பார்த்தனர். அதில் அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. தற்போது கோவை அரசு மருத்துவமனையில் தாயும், சேய்யும் சேர்க்கப்பட்டு நலமாக உள்ளனர்.



கிருஷ்ணகிரியை அடுத்த ஜாகீர்வெங்கடாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் விதைப்பந்து தயாரிக்கும் பணியில் மாணவ – மாணவிகள் முEFமாக ஈடுபட்ட காட்சி.

## ஜாகீர்வெங்கடாபுரம்

# அரசு பள்ளியில் விதைப்பந்து தயாரித்த மாணவ -மாணவிகள்!

**கிருஷ்ணகிரி, அக்.26**

கிருஷ்ணகிரி அடுத்த ஜாகீர்வெங்கடாபுரம் அரசு உயர்நிலை ப்பள்ளியில் விதைப்பந்து தயாரிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

கிருஷ்ணகிரி அடுத்த ஜாகீர்வெங்கடாபுரம் அரசு உயர்நிலை ப்பள்ளியில், உலக விலங்குகள் தினத்தை முன்னிட்டு, விலங்கு களை பாதுகாப் போம், மரங்களை வளர்ப்போம் என்ற தலைப்பில், நேற்று விதைப்பந்து தயாரிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில், 100 மாணவ, மாணவியர் விதைப் பந்து தயாரிப்பு பணியில் ஈடுபட்டனர். விதைப்பந்தில், புங்கம், வேப்பம், மயில் கொன்றை, மா, பூவரசம், சீதா, எலுமிச்சை, நெல்லி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட வகையான விதைகளை களிமண்ணில் வைத்து 1,000க்கும் மேற்பட்ட விதைப்பந்தை தயாரித்தனர். இந்நிகழ்ச்சிக்கு, பள்ளி தலைமை ஆசிரியர் சுதாராணி தலைமை வகித்து பேசுகையில், விதைகள், களிமண் மற்றும் மண் அல்லது எரு ஆகியவை கலந்து தயாரிப்பதே விதைப் பந்துகள். கலப்பைகள் மற்றும் பிற விவசாய உபகரணங்களைக் கொண்டு தரையை உழாமல், விதையிலிருந்து செடிகளை வளர்க்கும் பழைய முறையே இவை. உலகில் எங்கிருந்தும், களி மண், மண் மற்றும் விதை கிடைக்கக்கூடிய எவரும், முதலீடு இல்லாமல் விதைப் பந்துகளை உருவாக்கலாம்.

விதைப்பந்தின் மூலம் மறைமுகமாக காடுகள் உருவாக்கப்படுகிறது. இதனால் விலங்கினங்கள் பாதுகாக்கப்படுவதோடு, நல்ல மழையும் பெய்யும். எனவே ஆர்வம் உள்ள அனைவரும் விதைப்ப ந்துகளை தயாரித்து, அருகில் உள்ள இடங்களில் எறியலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியை, வட்டார வள மைய மேற்பார்வையாளர் அசோக்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதற்கான ஏற்பாடுகளை சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் வெண்ணிலா, உதவி தலைமை ஆசிரியர் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

## ரூ.47 லட்சம் மோசடி:

# எடப்பாடி அரசு பள்ளி ஆசிரியை - கணவருக்கு நிபந்தனை ஜாமீன்!

## ஐகோர்ட்டு உத்தரவு!!

**எடப்பாடி அக் 26**

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்திற்குட்பட்ட எடப்பாடியை அடுத்த மூலப்பாதையைச் சேர்ந்த குள்ளம்பட்டி அரசு பள்ளி ஆசிரியையான இந்திராவும், முன்னாள் ராணுவத்தினரான அவரது கணவர் மாதையனும் தங்களுக்கு சொந்தமான நிலத்தை கல்லப்பாளையத்தை சேர்ந்த செந்தாமரை என்பவரிடம் 56 லட்சம் ரூபாய்க்கு விற்பதற்காக விலைபேசி, 47 லட்சம் அட்வான்ஸ் பெற்றதாக கூறப்படுகிறது. பின்னர் நிலத்தையும் பதிவுசெய்யாமலும், பணத்தையும் திருப்பி கொடுக்கவில்லை என செந்தாமரை அளித்த புகாரில், சேலம் மத்திய குற்றப்பிரிவு போலீசார் இந்திரா மற்றும் மாதையன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் முன் ஜாமீன் கோரி இருவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு, நீதிபதி கே.ராஜசேகர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, புகார்தாரரிடன் 7 லட்சம் மட்டுமே வங்கி கணக்கின் மூலம் அட்வான்சாக பெற்றதாகவும், வேறு எந்த தொகையும் எந்த விதத்திலும் பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. வழக்கு நடைமுறையின் போதே 7 லட்சத்தை திருப்பி செலுத்திவிட்ட நிலையில், விற்பனை ஒப்பந்தத்தை மீறியதாக தங்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியாது என வாதிடப்பட்டது.

புகார்தாரர் தரப்பில் 9 லட்சம் வங்கி மூலமாகவும், 38 லட்சம் ரொக்கமாகவும் கொடுக்கப்பட்டதாகவும், அந்த தொகை மோசடி செய்யப்பட்டதாகவும் கூறி, முன் ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. காவல் துறை தரப்பில் புகார்தாரரிடம் மனுதாரர்கள் 47 லட்சம் பெற்றது விசாரணையில் தெரிய வந்துள்ளதால், முன்ஜாமீன்வழங்கக்கூடாது என ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி கே.ராஜசேகர், ஒப்பந்தத்தை நிறைவேற்றாதது தொடர்பான இந்த உரிமையியல் தன்மையுடைய விவகாரத்தில் கைது செய்து விசாரிக்க அவசியம் இல்லை என கூறி மனுதாரர்களுக்குநிபந்தனைமுன்ஜாமீன்வழங்கி உத்தரவிட்டார். இருவரும் சேலம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சரணடைந்து 20 ஆயிரத்துக்கான இரு நபர் உத்தரவாதத்தை தாக்கல் செய்து முன் ஜாமீன் பெற்றுக்கொள்ளலாம் என நிபந்தனை விடுத்து உத்தரவிட்டுள்ளார். அதன்பின்னர் மூன்று வார காலத்திற்கு தினமும், அதன்பின்னர் தேவைப்படும்போதும் காவல்துறை விசாரணை அதிகாரி முன்பு ஆஜராக வேண்டும் என்றும் நிபந்தனை விடுத்து உத்தரவிட்டார்.

# இருசக்கர வாகனம் மீது கார் மோதி பெண் பலி!

## மகன் படுகாயம்!!

**சங்ககிரி, அக். 26**

சங்ககிரி தாலுகா தேவூர் அருகே காவேரிப்பட்டி புதூர் பகுதியைச் சேர்ந்த



வர் முருகேசன். இவரது மனைவி வாசுகி(33). மற்றும் மகன் கண்ணன் (15) குமாரபாளையத்தில் உள்ள அவர்களது உறவினர் வீட்டிற்கு சென்று விட்டு தேவூர் நோக்கி வாசுகி, கண்ணன் டூவீலரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது தேவூர் பக்கமிருந்து குமாரபாளையம் நோக்கி வந்த கார் ஒன்று புள்ளாகவுண்டம்பட்டி வடக்கு காடு என்ற இடத்தில் இவர்கள் சென்ற டூவீலர் மீது மோதியது.

இந்த விபத்தில் தூக்கி வீசப்பட்ட வாசுகி, கண்ணன் இருவரும் படுகாயம் அடைந்தனர். அவர்களை அருகில் இருந்தவர்கள் மீட்டு குமாரபாளையம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு செல்லும் வழியில் வாசுகி பலியானார். கண்ணன் ஈரோட்டில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த விபத்து குறித்து தகவல் அறிந்த தேவூர் போலீசார் விபத்து

ஏற்படுத்திச் சென்ற காரை கைப்பற்றி தலைமறைவான கார் டிரைவரை தேடி வருகின்றனர்.

## மத்தூர் அருகே

# 4 வயது பெண் குழந்தையிடம் பாலியல் சீண்டல்!

## புரோட்டா மாஸ்டர் போக்சோவில் கைது!!

**ஊத்தங்கரை அக். 26**

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே உள்ள நரால் சந்தம் பட்டி பகுதியை சேர்ந்த பெருமாள் மகன் குணசீலன் வயது (35) இவருக்கு மனைவியும், இரண்டு குழந்தைகள் உள்ளன.

இவர் ஹோட்டல்களில் புரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்று அப்பகுதியில் உள்ள உறவினரின் 4 வயது பெண் குழந்தையை தனியாக அழைத்துச் சென்று பட்டாசு வாங்கி தருவதாக கூறி பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக குழந்தை அழுது கொண்டு பெற்றோர்களிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது .இது



குறித்து குழந்தையின் பெற்றோர்கள் மத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் மத்தூர் போலீசார் குணசீலன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு பதிந்து கைது செய்ததுடன், போச்சம்பள்ளி கோட்டில் ஆஜர்படுத்தி தர்மபுரி மாவட்ட சிறையில் அடைத்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் 94 பேருக்கு ரூ.2.24 கோடியில் வீடுகள் மறு கட்டுமானப்பணி ஆணைகளை மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்.





# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் செல்வகணபதி எம்.பி. ஆய்வு!

## நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!!

**எடப்பாடி அக்.26**

சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொங்கணாபுரம் ஒன்றியம் எருமபட்டி ஊராட்சியில் தமிழக முதலமைச்சரின் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைப்பெற்றது.

அனைத்து துறை அதிகாரிகளிடம் பங்கேற்று நடைபெற்ற இந்த முகாமினை சேலம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது ஆதார் அட்டை பதிவு செய்யும் பகுதியில் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்ததால் அவர்களுக்கு சேர் எடுத்து போட்டு அனைவரும் இடைவெளி விட்டு அமர்ந்து ஒருவர் பின் ஒருவராக செல்லும்படி அறிவுறுத்தினார்.

இதனை தொடர்ந்து வறண்ட 100 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட்டத்தினை எருமைப்பட்டி ஊராட்சியில் கொண்டு வர வேண்டும் என பொதுமக்களில் ஒருவர் கொடுத்த மனுவுக்கு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்து வருவாய்த்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு பட்டாவும், தோட்டக்கலைத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு விதைகளும் வழங்கினார்.

அப்போது கொங்கணாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவம், பேரூர் செயலாளர் அர்த்தநாரீஸ்வரர் எருமபட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்பழனிசாமி, எடப்பாடி வட்டாட்சியர் வைத்தியலிங்கம் உட்பட அரசு அதிகாரிகள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை அருகே

# ஆலங்குடி மகளிர் மேல்நி லைப்பள்ளிக்கு ஒரு கோடி மதிப்பிலான ஆடிட்டோரியம்!

## அமைச்சர் ரிப்பன் வெட்டி மாணவிகளுக்கு அர்ப்பணித்தார்!!



**புதுக்கோட்டை அக்.26**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மகளிர் மேல்நிலை பள்ளிக்கு கடந்த 2022 ம் ஆண்டு ஒரு கோடி மதிப்பில் ஆடிட்டோரியம் கட்ட அமைச்சர் மெய்யநாதன், அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

ஆடிட்டோரியம் பணிகள் முடிந்து நேற்று பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநா தன் தலைமையில் ரிப்பன் வெட்டி ஆடிட்டோரியத்தை பள்ளி மாணவிகளுக்கு அர்ப்பணித்தார்.

பின்னர்விழாமேடையில்குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். பள்ளியின் தலைமை ஆசிரி யர் கவுசல்யா அனைவரையும் வரவேற்று பேசி னார்.

விழாவில் திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செய லாளரும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவருமான கே பி கே டி தங்கமணி, பேரூராட்சி தலைவர் ராசி முருகானநம் ஆலங்குடி தாசில்தார் வில்லியம் மோசஸ் திருவரங்குளம் வட்டார மருத் துவர் ராமச்சந்தர் அறந்தாங்கி மாவட்ட கல்வி அலு வலர் மாயக்கிருஷ்ணன் நகர செயலாளர் பழனிகு மார் மற்றும் துணைத் தலைவர் செங்கோல் பேரூராட்சி கவுன்சிலர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் மாவட்ட தொண்டரணி துணை அமைப் பாளர் சரவணன் பள்ளி ஆசிரியர் ஆசிரியைகள் மாணவிகள் அலுவலகபணியாளர்கள்பேரூராட்சிதூய்மை பணி யாளர்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக திமுக நிர்வாகிகள் கலந்து கொண்ட னர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# 1 லட்சம் மரக்கன்றுகள் நடும் விழா!

**குமாரபாளையம், அக்.26**

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம் பல்லக்காபாளையம் ஊராட்சி ஆயிகவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள பொய்யேரி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பாக 2025–2026 ஆண்டிற்கான பசுமையான தமிழ்நாடு என்ற முன்னெடுப்பின் மூலம் பள்ளிபாளையம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் விழா வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ் குமார் தலைமையிலும் குமராபாளையம் தாசில்தார் பிரகாஷ் முன்னிலையிலும் இன்று நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் நாச்சி முத்து கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைத்து மரக்கன்றுகளை நட்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், ஜான்பீட்டர், ராஜ், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சம்பத் , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முரளி , ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மேட்டுக்கடை கார்த்திக் , கழக நிர்வாகிகள் சிவகுமார், தண்டபாணி, மாதேஷ், குழந்தைவேல், செல்வன், விஜயகுமார், தனசேகரன், சிதம்பரம், ராஜேந்திரன் மற்றும் கிளை இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அரூர் அடுத்த கோட்டப்பட்டி பகுதியில் பெய்த கன மழையால் கோட்டப்பட்டி கருமந்துறை சாலையில் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் வாகனங்களில் செல்வோர் கடும் சிரமத்திற்கு உள்ளாவதால் இச்சாலையை சீரமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.2000 உதவி பெற்ற தென்காசி மாவட்ட பயனாளிகள் முதலமைச்சருக்கு நன்றி



பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் அக்குழந்தைகள் 18 வது வரையிலான பள்ளிப்படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2000/ உதவித்தொகை வழங்கிடும் அன்புக்கரங்கள் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 15.09.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு அரசின் தாயுமானவர் திட்டம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உலகளாவிய சகோதரத்துவம் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இய



லாத குழந்தைகளை அரவணைத்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வது வரையிலான பள்ளிப்படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர அன்புக்கரங்கள் என்ற திட்டத்தின் மூலம் மாதம் ரூ.2000/ வழங்கப்படும். பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிக்கப்பட்டது.அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் முதல்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 6,802 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். தென்காசி மாவட்டத்தில் முதற்கட்டமாக 145 குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் தெரிவித்ததாவதுஎன் பெயர் ஆரிஃபாதஸ்னீம். சொந்த ஊர் தென்காசி மாவட்டம் செங்கோட்டை. என்னுடைய அம்மா, அப்பா இருவரும் இறந்து விட்டார்கள். என்னுடைய பாட்டி தான் என்னை வளர்த்து வருகிறார்கள். நான் 10 ஆம் வகுப்பு படித்து முடித்து விடடு எம்.எஸ்.பி.வி பாலிடெக்னிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். தற்போது எனக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.2000/ உதவித்தொகை கிடைக்கிறது. இதனால் என்னுடைய படிப்புச் செலவு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு



இப்பணம் மிகவும் உதவியாக உள்ளது. என்னைப் போன்ற ஏழைக் குழந்தைகளுக்கு இத்திட்டம் மிகவும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பெயர் செல்வக்குமார். சொந்த ஊர் தென்காசி மாவட்டம் ஆலடிப்பட்டி. என்னுடைய அம்மா, அப்பா இருவரும் இறந்து விட்டார்கள். நான் என் அம்மாவின் உறவினர் வீட்டில் ஆவுடையானூரில் வசித்து வருகிறேன். அவர்கள் தான் என்னை படிக்க வைக்கிறார்கள். நான் தற்போது ஆவுடையானூர் புனித அருளப்பர் மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வருகிறேன். தற்போது எனக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.2000/ உதவித்தொகை கிடைக்கிறது. இதனால் என்னுடைய படிப்புச் செலவு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு இப்பணம் மிகவும் உதவியாக உள்ளது. என்னைப் போன்ற ஏழைக் குழந்தைகளுக்கு இத்திட்டம் மிகவும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்

**வெளியீடு :**
**திரு.ஏ.எடிசன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்காசி மாவட்டம்.**